# கொழும்புப் பல்கலைக்கழகக் கணினிக் கல்லூரி

## 2017/2018 கல்வியாண்டிற்காக தகவல் முறைமைகள் விஞ்ஞான இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பதாரிகளின் தெரிவுக்கான உளச்சார்புப் பரீட்சை

2017ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட "**இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இளமாணிப் பட்டக் கற்கைநெறிகளுக்கான அனுமதி – கல்வியாண்டு 2017/2018**" என்ற கைநூலின் பிரிவு 1.2 மற்றும் பிரிவு 2.2.8.27 ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டவாறு பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமைகளைக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகளிடமிருந்து உளச்சார்புப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

மேற்படி கற்கை நிகழ்ச்சித்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட தகைமை பெறுவதற்கு உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைவது ஒரு முன்-தேவையாகும். ஆகையால், மேற்படி கற்கை நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பரிசீலிக்கப்படுவதற்கு தமது விருப்பத் தெரிவுகளைக் குறிப்பிட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு 2017/2018 கல்வியாண்டு அனுமதிக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்லூரியினால் நடத்தப்படவிருக்கும் உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பித்து, தோற்றுமாறு வேண்டப்படுகின்றனர்.

**உளச்சார்புப் பரீட்சை ஆங்கில மொழி மூலம் மட்டுமே நடாத்தப்படும் என்பதனை தயவு செய்து கவனிக்கவும்.**

**முக்கியமான திகதிகள்**
விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி: **09.02.2018**
உளச்சார்புப் பரீட்சைத் திகதி : **25.03.2018 (ஞாயிற்றுக்கிழமை)** (கொழும்பில் மட்டும் நடாத்தப்படும்)

**விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் நடைமுறை**

1. விண்ணப்பதாரிகள் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்லூரியின் www.ucsc.cmb.ac.lk என்ற இணையத்தள முகவரியில் தொடரறா (online) விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்வதன் மூலம் விண்ணப்பிக்க வேண்டும் **அல்லது A4 அளவிலான தாள்** ஒன்றில் கீழே தரப்பட்ட மாதிரிக்கு அமைய ஆங்கிலத்தில் தமது சொந்த விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்து, முறையாகப் பூரணப்படுத்த வேண்டும். விண்ணப்பதாரிகள் முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் காசுக் கொடுப்பனவு உறுதிச்சீட்டு **(cash pay-in-voucher)** மற்றும் க.பொ.த. (சா/த) பெறுபேற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஆகியவற்றை Senior Assistant Registrar/Examinations & Registration, University of Colombo School of Computing, No. 35, Reid Avenue, Colombo 7 என்ற முகவரிக்கு **09.02.2018 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில்** அனுப்ப வேண்டும். தொடரறா (online) முறை மூலம் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளும் நிரப்பிய விண்ணப்பத்தை மின் அச்சு (Printout) பிரதி எடுத்து மேலே குறிப்பிடப்பட்ட நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்.

2. விண்ணப்பதாரிகள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"IS - Aptitude Test 2017/2018"** என்ற தலைப்பினைத் தயவு செய்து குறிப்பிடவும். விண்ணப்பப் படிவம் மற்றும் ஏனைய ஆவணங்களை மடிக்காமல் **A4 அளவிலான** அல்லது பெரிய அளவிலான கடித உறையில் இட்டு அனுப்ப வேண்டும். இந்த விண்ணப்பம் **எந்தச் சூழ்நிலையிலும் நேரடியாக** மேலே குறிப்பிட்ட விலாசத்தில் கையளிக்கப்படக்கூடாது.

3. உளச்சார்புப் பரீட்சைக் கட்டணமான **ரூபா 1,000/-** திம்பிரிகஸ்யாய மக்கள் வங்கிக் கிளையிலுள்ள கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்லூரியின் **086-1-001-2-1190316** என்ற இலக்கக் கணக்கிற்கு எந்த மக்கள் வங்கிக் கிளையிலாவது வைப்பிலிடவேண்டும். இந்த நோக்கத்திற்காக தொடரறா (online) விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்யும் பரீட்சார்த்திகள் கணினிக் கல்லூரியின் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கப்படக்கூடிய **காசுக் கொடுப்பனவு உறுதிச்சீட்டை** பயன்படுத்த வேண்டும். ஏனைய பரீட்சார்த்திகள் மக்கள் வங்கியின் ஏதேனும் கிளையில் கிடைக்கும் காசுக் கொடுப்பனவு உறுதிச்சீட்டைப் பயன்படுத்த வேண்டும். காசுக் கொடுப்பனவு உறுதிச்சீட்டின் புகைப்படப்பிரதியினை விண்ணப்பதாரி தனது தேவைக்காக வைத்துக்கொள்கின்ற அதே வேளை, மூலப்பிரதியை விண்ணப்பப் படிவத்தின் பின்புறத்தில் ஒட்டிவிட்டு, விண்ணப்பப் படிவத்தைக் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்லூரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பதைத் தயவு செய்து குறித்துக்கொள்க. **காசோலைகள்/காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.**

**குறிப்புகள்:**

(i) உளச்சார்புப் பரீட்சைக்கான அவசியமான அனுமதித் தேவைகளைத் திருப்திப்படுத்தும் பரீட்சார்த்திகளுக்கு மட்டுமே அனுமதி அட்டைகள் வழங்கப்படும்.

(ii) அனுமதிக்கான குறைந்த பட்ச தகைமைகளைக் கொண்டிருக்காக விண்ணப்பதாரிகளுக்கு எதுவித அறிவித்தலும் செய்யப்பட மாட்டாது என்பதுடன் கட்டணமும் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

(iii) பின்வரும் காரணங்களினால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்:

அ) பரீட்சார்த்தி ஒருவர் தகவல் முறைமைகளில் விஞ்ஞான இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான குறைந்தபட்சத் தகைமைகளைக் கொண்டிராதிருத்தல்.

ஆ) விண்ணப்பப் படிவம் (தொடரறா/அச்சிலான) பூரணப்படுத்தப்படாதிருத்தல்.

இ) விண்ணப்பப் படிவத்தின் (தொடரறா/அச்சிலான) மற்றும் **காசுக் கொடுப்பனவு உறுதிச்சீட்டின்** பிரதியொன்றுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் **09.02.2018** ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் பரீட்சைகள் மற்றும் பதிவுகள் பிரிவுக்கு கிடைக்கப் பெறாதிருத்தல்.

(iv) உளச்சார்புப் பரீட்சைக்கு முன்னர் அனுமதி அட்டையை பெற்றுக்கொள்ளாத தகுதிவாய்ந்த பரீட்சார்த்திகள் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/பரீட்சைகள் மற்றும் பதிவுகள் என்பவரைத் தொடர்பு கொள்ளலாம் அல்லது **16.03.2018 ஆம் திகதி அன்று அல்லது அதன் பின்னர்** கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கல்லூரியின் இணையத் தளத்திலிருந்து அனுமதி அட்டைகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

(v) சித்தி பெற்றவர்களின் பட்டியல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படுவதுடன் கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கல்லூரியின் இணையத் தளத்திலும் பிரசுரிக்கப்படும் (www.ucsc.cmb.ac.lk).

(vi) **உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைதல் மாத்திரம் பரீட்சார்த்தியினை தகவல் முறைமைகள் விஞ்ஞான இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு அனுமதிப்பதற்கான தகைமையாகாது.**

விண்ணப்ப நடைமுறை அத்துடன்/அல்லது உளச்சார்புப் பரீட்சை ஆகியன தொடர்பான விசாரணைகளுக்கு சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/பரீட்சைகள் மற்றும் பதிவுகள் என்பவரை 011-2581245 அல்லது 011-2581246 (ext.: 8997, 8986) என்ற தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளவும்.

பணிப்பாளர்
கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்லூரி
11.01.2018

# UNIVERSITY OF COLOMBO SCHOOL OF COMPUTING (UCSC)

**SPECIMEN APPLICATION FORM**

**For office use only**

**UNIVERSITY ADMISSION - ACADEMIC YEAR 2017/2018**
**APTITUDE TEST FOR THE SELECTION OF CANDIDATES FOR**
**BACHELOR OF SCIENCE IN INFORMATION SYSTEMS DEGREE PROGRAMME**

1. Full Name in block letters (Leave one blank cage between names)

2. Contact Address in block letters (Leave one cage between different segments of the address)

3. Contact Telephone No. Home ____________ Mobile ____________

4. E-mail Address: ____________

5. Gender: Male ☐ Female ☐ 6. NIC No. ____________

7. **Results of G.C.E. (A/L) Examination 2017**
   i. **Index No.** ____________ ii. Z-Score +/- __ • ____

   iii. Subjects offered & Grades (indicate grade in cage appearing against the respective subject)
   **[Note that the candidate should have obtained at least a Credit Pass (C) in at least TWO of the following subjects at the G.C.E. (A/L) Examination]**

| **Subject** | **Grade** | **Subject** | **Grade** |
|---|---|---|---|
| Higher Mathematics | | Mathematics/Combined Mathematics | |
| Physics | | Chemistry | |
| Biology | | Business Statistics | |
| Accounting | | Business Studies | |
| Economics | | Political Science | |
| Logic & Scientific Method | | Geography | |
| Civil Technology | | Mechanical Technology | |
| Electrical, Electronic and Information Technology | | Information and Communication Technology | |
| ……………………………………………… | | | |

8. **G.C.E. (O/L) Examination**
   **[Note that the candidate should have obtained at least a Credit Pass (C) in English and Mathematics at the G.C.E. (O/L) Examination.]**

Results for

| | Index No | Grade | Year |
|---|---|---|---|
| Mathematics | | | |
| English | | | |

**Note:** If you have not indicated the Bachelor of Science in Information Systems Degree Programme conducted by the UCSC in the order of preference given in the application for University Admissions submitted to the University Grants Commission, you are not eligible to be selected for this Degree Programme irrespective of whether you will pass the Aptitude Test, or not.

I certify that the above particulars submitted by me are true and accurate.

Signature of Applicant: ……………………………… Date: …………………………